செ.வெ.எண்: 02 நாள்: 01.03.2017

**அரியலூர் மாவட்டத்தில் கிராம ஊராட்சிகளில் குடிநீர் விநியோகம் செய்வதை கண்காணித்திட கிராம ஊராட்சி வாரியாக அலுவலர்கள் கொண்ட குழு அமைத்து அவர்கள் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

அரியலூர் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், **குடிநீர் விநியோக செய்யவதை கண்காணித்திட** வருவாய்த்துறையில் வட்டாட்சியர்கள் மற்றும் வளர்ச்சித்துறையில் வட்டார வளர்ச்சி அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி செயலர்கள் கொண்டு **24 குழுக்கள்** அமைக்கப்பட்டு, மேற்கண்ட அலுவலர்களுக்கு 7 முதல் 10 ஊராட்சிகள் ஒதுக்கிடு செய்யப்பட்டு, ஊராட்சியல் உள்ள குடிநீர் விநியோகம் குறித்து தினந்தேறும் நேரடி தணிக்கை செய்து, நிர்ணயிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்வதை ஆய்வு மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

அரியலூர், ஜெயங்கொண்டம் மற்றும் குன்னம் ஆகிய சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து 22 பணிகள் **ரூ.95.35 இலட்சம்** மதிப்பிலும், பஞ்சாயத்து யூனியன் பொது நிதியிலிருந்து 8 பணிகள் **ரூ.30.10 இலட்சம்** மதிப்பிலும், பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து 2 பணிகள் **ரூ.6.50 இலட்சம்** மதிப்பிலும், பதினாங்காவது மாநில நிதிக்குழு மானிய நிதியிலிருந்து 8 பணிகள் **ரூ.32.05 இலட்சம்** மதிப்பிலும், ஊராட்சிகள் நிதியிலிருந்து 2 பணிகள் **ரூ.8.45 இலட்சம்** மதிப்பிலும், பேரூராட்சிகளில் மாநில பேரிடர் நிவாரணத் திட்ட நிதியிலிருந்து 13 பணிகள் **ரூ.32.60 இலட்சம்** மதிப்பிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாடு குடிநீர் வரிகால் வாரியத்தின் மூலம் **ரூ.60.90 இலட்சம்** ஒதுக்கீடு செய்யப்பட்டு, சீரான முறையில் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கிராமப்புறங்களில் தட்டுபாடு இன்றி குடிநீர் வழங்க ஆழ்துளாய் கிணறு அமைத்தல், மேல்நிலை மற்றும் தரைமட்ட தொட்டிகளில் தூய்மை (குளோரினைசேஷன்) செய்து குடிநீர் விநியோகத்தை முறைப்படுத்தி வழங்க உத்தவிடப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் குடிநீர் விநியோகம் குறித்து புகார்களை 6 ஊராட்சி ஒன்றிங்களில் பிரத்தியேக கட்டுப்பாட்டு அறை செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் குடிநீர் தட்டுப்பாடு தலைமை மைய கட்டணமில்லா தொலைபேசி எண்.04329 - 1077 மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கைப்பேசி எண்களான, அரியலூர் ஊராட்சிக்கு **7402607747,** திருமானூர் ஊராட்சிக்கு **7402607750,** செந்துறை ஊராட்சிக்கு **7402607754,** ஜெயங்கொண்டம் ஊராட்சிக்கு **7402607758,** ஆண்டிடம் ஊராட்சிக்கு **7402607762,** தா.பழூர் ஊராட்சிக்கு **7402607764,** மேலும், குடிநீர் குறித்த தகவல்களை தெரிவிக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களை தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்.**9047992233,** திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை அவர்களை தொடர்பு கொள்ள வேண்டிய எண்.**7373704219,** உதவி இயக்குநர் ஊராட்சிகள் அவர்களை தொடர்பு கொள்ள வேண்டிய எண்.**7402607736** ஆகிய தொலைபேசி எண்ணிற்கு தகவல்களை அளிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி.பத்மஜாதேவி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ரெங்கராஜன், உதவி இயக்குநர் ஊராட்சிகள் திருமதி.கங்காதாரணி, அரியலூர் கோட்டாட்சியர் திரு.மோகனராஜன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.